SHRIRAM
Commercial Vehicle Finance
GETS YOU GOING

SEC/FILING/BSE-NSE/16-17/68A-B

November 21, 2016

BSE Limited
P. J. Towers,
Dalal Street, Fort,
Mumbai – 400 001.
Scrip Code: 511218

National Stock Exchange of India Limited
Listing Department
Exchange Plaza, 5th Floor,
Plot no. C/1, G- Block,
Bandra-Kurla Complex,
Mumbai – 400 051.
NSE Symbol: SRTRANSFIN

Dear Sir,

Sub.: Publication of Notice
Re: Transfer of Equity Shares of the Company to Investor Education and Protection Fund/suspense account.

In furtherance to our letter dated November 18, 2016, we enclose the newspaper clipping of the Notice re: Transfer of Equity Shares of the Company to Investor Education and Protection Fund/suspense account published on November 18, 2016, in the Makkal Kural (Regional Tamil Language) newspaper.

Thanking you,

Yours faithfully,
For **SHRIRAM TRANSPORT FINANCE COMPANY LIMITED**

VIVEK ACHWAL
COMPANY SECRETARY
Encl.: a/a.

SHRIRAM
Commercial Vehicle Finance
GETS YOU GOING

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

Corporate Identity Number (CIN): L65191TN1979PLC007874
பதிவு அலுவலகம்: மூகாம்பிகா காம்ப்ளக்ஸ், 3வது தளம், எண்.4,லேடி தேசிகா ரோடு, மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி எண்: +91 44 2499 0356
பேக்ஸ்: +91 44 2499 3272. வெப்சைட்: www.stfc.in இமெயில்: iepfclaims@sffc.in

பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

(கம்பெனியின் சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (ஐஇபிஎப்) சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றம் செய்வதற்காக)

செப்டம்பர் 7, 2016 முதல் கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் அறிவித்தபடி, கம்பெனிகள் சட்டம் 2013 ('சட்டம்'), பிரிவு 124 (6) மற்றும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கியல், தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திரும்ப அளித்தல்) விதிகள் 2016 ('விதிகள்')–ன்படி, இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அதன்படி, தொடர்ந்து ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக டிவிடெண்ட் பெறாமல் அல்லது கோராமல் இருந்த அனைத்து பங்குகளும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி சஸ்பென்ஸ் கணக்கிற்கு கம்பெனியால் மாற்றப்படும். விதிகளில் உள்ள தேவைகளுக்கிணங்க, முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட உள்ள பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்களுக்கு தனித்தனியே அறிவிப்புகள் அவர்கள் கடைசியாக அளித்த முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் விவரங்கள் மற்றும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட உள்ள பங்குகள் குறித்த விவரம் கம்பெனியின் இணையதளத்தில் உள்ள 'முதலீட்டாளர்' பிரிவின் கீழுள்ள 'http://www.stfc.inல் உள்ளது.

கோரப்படாத டிவிடெண்டுகள் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்படுவதை தவிர்க்க, சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் கம்பெனி/கம்பெனிகள் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (இந்த அறிவிப்பின் கடைசி பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை பார்வையிடவும்) அவர்களுக்கு நவம்பர் 30, 2016 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விதிகளின்படி முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட உள்ள பங்குகளுக்காக நிர்வாகத்திற்கு எதிராக எதையும் கோர முடியாது. முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட்ட பங்குகளை, விதிகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றி முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்திடமிருந்து திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

விதிகளின்படி முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றுவதற்காக, பங்குதாரர்கள் வைத்துள்ள அசல் பங்கு சான்றிதழ்களுக்கு பதிலாக மாற்று பங்கு சான்றிதழ்களை கம்பெனி வழங்கும் என்பதை பங்குகளை காகித வடிவில் வைத்துள்ள பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு வழங்கப்படுவதால், அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள அசல் பங்கு சான்றிதழ்கள் தானாகவே ரத்தாகிவிடும். எனவே வர்த்தகம் மேற்கொள்ள முடியாது. டீமெட்டீரியலைஸ்ட் முறையில் பங்குகள் வைத்துள்ளவர்களை பொறுத்தவரை, அவர்களது முதலீட்டு பங்கேற்பாளரின் உதவியுடன் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்தின் டீமெட் கணக்கில் பங்குகள் மாற்றப்படும். இணைய தளத்தில் கம்பெனியினால் பதிவேற்றம் செய்யப்படும் தகவல்கள், விதிகளின்படி முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி சஸ்பென்ஸ் கணக்கிற்கு பங்குகளை மாற்றுவதற்கான முன்அறிவிப்பாக கருதப்படும்.

மேற்கண்ட விஷயம் குறித்து ஏதேனும் சந்தேகம் இருப்பின் அது குறித்து ஒருங்கிணைப்பு அதிகாரி திருமதி ஷைலா மேனன், தொலைபேசி எண் +91 22 40959537 (பேக்ஸ் எண். +91 22 40959597) இமெயில்: iepfclaims@stfc.in அல்லது கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர், இன்டக்ரேட்டட் எண்டர்பிரைசஸ் (இந்தியா) லிமிடெட், திருமதி அனுஷா என்/திருமதி உமா மகேஸ்வரி எம், யூனிட்: ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 2வது தளம், ''கென்சஸ் டவர்ஸ்'', எண்.1, ராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை–600 0017. தொலைபேசி எண்: +91 44 28140801 to 28140803 பேக்ஸ்:+91 44 28142479 இமெயில்: corpserv@integratedindia ஆகியோரை அணுகலாம்.

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டுக்காக

ஒப்பம்/–

இடம்: சென்னை
தேதி: நவம்பர் 17, 2016

விவேக் எம் அச்வால்
கம்பெனி செயலாளர்